
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1201

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

171

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...



# கல்வியில் சிறந்த தமிழ்நாடு
# சாதனையல்ல; சமூக நீதியின் வரலாறு!

"ஆயிரம் ஆண்டுகளாக சாதி எனும் கால் முளைத்த சதி இந்த சமூகத்தை ஆட்கொண்டதால், நம்முடைய கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. வரலாறு நெடுக, இந்த ஆதிக்கத்துக்கு எதிராக, கலகம் செய்த புரட்சியாளர்கள் இருந்துகொண்டேதான் இருக்கிறார்கள். அந்தத் தொடர்ச்சியின் உச்சமாக திராவிட இயக்கம், தமிழ் மண்ணில் நிகழ்த்திய புரட்சிதான், இன்றைக்கு நாம் இந்தளவுக்கு வேகமாக நடைபோடக் காரணமாக இருக்கிறது! தமிழ்நாடு கல்வியில் இந்தியாவுக்கு முன்னோடியாக இருந்து வருகிறது" என 2025 செப்டம்பர் 25-ஆம் தேதி அன்று நேரு உள்விளையாட்டு அரங்கில், நடைபெற்ற 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக உணர்வுபூர்வமாகக் குறிப்பிட்டார் நம் கழகத் தலைவர் அவர்கள்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை, கழக அரசு அமைந்தபோதெல்லாம் செய்து வந்திருக்கிறது. கடந்த 2021 - 2026 திராவிட மாடல் ஆட்சிக்காலத்தில், 'நான் முதல்வன் திட்டம்', 'தமிழ்ப்புதல்வன் திட்டம்', 'புதுமைப்பெண் திட்டம்', 'காலை உணவுத் திட்டம்', 'மாடல் ஸ்கூல்ஸ்', 'ஸ்மார்ட் வகுப்பறைகள்', 'அண்ணல் அம்பேத்கர் அயலகக் கல்வித் திட்டம்' எனப் பல்வேறு திட்டங்கள் கல்வி வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### உயர்கல்வி வளர்ச்சி

காலை உணவு தருவதாலோ, மாதம் 1000 ரூபாய் தருவதாலோ, "என்ன பெரிய மாற்றம் வந்துவிடும்?" என்று சிலர் நினைக்கலாம். காலை உணவுத் திட்டம் அறிமுகம் செய்ததில் இருந்து, பள்ளிகளில் மாணவர்களுடைய வருகை அதிகரித்திருக்கிறது. புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததில் இருந்து, ப்ளஸ்-2 முடித்த மாணவர்களில் 75 சதவிகித மாணவர்கள் உயர்கல்வியில் சேர்கின்றனர். குறிப்பாக, பெண்கள் உயர்கல்வியில் சேருவது அதிக அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்கின்றன புள்ளிவிவரங்கள். 2021-25 வரையிலான காலகட்டத்தில், அரசுப் பள்ளியில் படித்த 1,878 மாணவர்கள், இந்திய அளவிலும், உலக அளவிலும் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுக்குப் படிக்கச் சென்றுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்வித் துறையில் தமிழ்நாடு கண்ட எழுச்சி, இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்களைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. திராவிட மாடல் அரசின் திட்டங்களை, தங்கள் மாநிலங்களில் செயல்படுத்த ஆய்வு செய்கின்றனர். அப்படியான சாதனைகளை உலகுக்கு உரத்துச் சொல்ல வேண்டும் என்றுதான் **'கல்வியில் சிறந்த தமிழ்நாடு'** நிகழ்ச்சியை நடத்தியது கழக அரசு.

அரசின் திட்டங்களால் பயனடைந்த மாணவ மாணவிகள் மேடையேறி, தாங்கள் அடைந்த பலன்களையும், இந்த திட்டங்கள் தங்களின் கல்விக்கு எப்படி உதவிக் கொண்டிருக்கிறது என்பதையும் உளமார எடுத்துக்கூறினர். குறிப்பாக, அந்தத் திட்டங்கள் வழி பயன்பெற்றவர்களின் பின்புலமும், அனுபவமும் பெரும் உத்வேகத்தை அளிப்பதாக இருந்தன.



**புதுமைப்பெண் திட்டப் பயனாளி மாணவி ரம்யா கூறுகையில்...**

"என்னுடைய தாய்க்கு காது கேட்காது. அரசு கொடுக்கும் 1000 ரூபாய் மூலம் என்னுடைய தாய்க்கு காது கேட்கும் கருவி வாங்கிக் கொடுத்தேன். எங்களைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் எங்களையும், அம்மாவையும் கேலி செய்திருக்கிறார்கள். இதனால், பலமுறை வருத்தப்பட்டிருக்கிறேன். அப்பா, அம்மா... நீங்க கவலப்படாதீங்க உங்களை நான் விட்டுறமாட்டேன்...!" என்று பேசியது, காண்போரைக் கண்கலங்க வைத்தது.

ஒட்டுமொத்தமாக அந்த நிகழ்ச்சி, கழக அரசின் திட்டங்களால் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், தமிழ்நாட்டு மாணவ, மாணவிகளின் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் முன்னேற்றங்களை ஆவணமாகக் காட்சிப்படுத்தியது. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி, சமூக நீதிப் பாதையின் ஆட்சி என்பதை உரத்த குரலில் கூறியது.

நிகழ்ச்சியில், முதலமைச்சராக கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையில், தமிழ்நாட்டில் கல்வி வரலாற்றை எடுத்துக் கூறியவர், "இந்த நிகழ்ச்சி நடத்துவதற்கு முக்கியக் காரணம், எங்களைப் பாராட்டிக் கொள்வதற்காக அல்ல, இன்று பயன்பெற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் அனுபவங்களைக் கேட்டு, அடுத்தடுத்த தலைமுறை மாணவர்களுக்கும் படிப்பின் மீது ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும்! அதுதான் முக்கியம். நம்முடைய அரசு உருவாக்கித் தரக்கூடிய வாய்ப்புகளை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உயர உயர பறக்க வேண்டும். அதைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்" என்று உள்ளன்போடு குறிப்பிட்டார்.



நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக, தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, கலந்துகொண்டு 'புதுமைப்பெண்' திட்டம், 'தமிழ்ப்புதல்வன்' திட்டங்களில் கூடுதலாக 2.56 இலட்சம் பேருக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் கொடுப்பதை முதலமைச்சருடன் இணைந்து தொடங்கி வைத்தார்.

> **திராவிட மாடல் விதைத்த கல்வி வளர்ச்சியின் சான்றாக அந்த நிகழ்ச்சியும், உணர்ச்சியும் மக்களின் மனத்தில் என்றும் நிலைத்திருக்கும்.**

"இந்த எழுச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான், கல்விக்குத் தடை ஏற்படுத்தலாம் என்று ஒன்றியத்தில் நினைக்கிறார்கள்! நம்முடைய வளர்ச்சியைப் பார்த்து, ஒதுக்க முடியாமல், தடை ஏற்படுத்துகின்றனர்" என்றும் அவரது உரையில், 'திராவிட மாடல் ஆட்சி'க்கான தடைகளை உடைத்துப் பேசினார். அந்தத் தடைகளில் அவர்கள் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், திராவிட மாடல் விதைத்த கல்வி வளர்ச்சியின் சான்றாக அந்த நிகழ்ச்சியும், உணர்ச்சியும் மக்களின் மனத்தில் என்றும் நிலைத்திருக்கும். நம் பிள்ளைகள் உயரே உயரே செல்ல, திராவிட மாடல் அரசு உருவாக்கிய திட்டங்களும் நிலைத்திருக்கும்.

**...சாதனை தொடரும்**

## ஸ்டிக்கர் ஒட்டும், 'சோபா மாடல்'!

தமிழ்நாட்டில் புதிய அரசு ஆட்சியமைத்து, ஒரு வார காலமே ஆகியுள்ள நிலையில், முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்புகள் எதையும் இதுவரை செய்யவில்லை. ஆனால், 'திராவிட மாடல் ஆட்சி'யில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பலவற்றைப் புதிதாக தற்போதுதான் தொடங்கியது போல ஸ்டிக்கர் ஒட்டும் வேலையை மட்டும் திறம்படச் செய்கிறது, இந்த 'சோபா மாடல் அரசு'. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, 'திராவிட மாடல் ஆட்சி'யில் ரோந்து பணிகளுக்காக, 'பிங்க் பேட்ரோல்' அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, அத்திட்டத்தை 'சிங்கப்பெண்' என ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறார்கள்.

அதேபோல, 'டாஸ்மாக் கடைகளில் 21 வயதுக்குக் குறைவான நபர்களுக்கு மது வழங்கக்கூடாது' என்பது ஏற்கெனவே இருந்த நடைமுறை. ஆனால், அது தற்போது செய்யப்பட்ட புதுமையான அறிவிப்பு போல பரப்பப்பட்டது. இந்த வரிசையில் சார்பதிவாளர் அலுவலகங்களில் அனைவரையும் அமர வைத்துத்தான் பேச வேண்டுமென்று ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு முன்பு இது நடைமுறையிலேயே இல்லாததைப் போல சித்திரிக்கக்கூடாது என வழக்கறிஞர் ரமேஷ் பெரியார் என்பவர் கண்டித்துப் பதிவிட்டுள்ளார்.

"தமிழ்நாட்டிலுள்ள ஏறக்குறைய 50% சார்பதிவாளர் அலுவலகங்களில் என் பாதம் பட்டிருக்கிறது... பத்திரப் பதிவுத் துறை வரலாற்றில் சார் பதிவாளர் எனப்படுபவர் ஒரு நீதிபதிக்கு இணையான அதிகாரம் கொண்டவராகக் கருதப்பட்டு, அவருக்கு நீதிமன்றங்களில் நீதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் இருக்கை போல் உயரமான இருக்கைகள் தான் இருந்து வந்தன. 2021-ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்புதான் உயரமான இருக்கைகளுக்குப் பதில், எல்லோரும் போல் சமமான இருக்கையில் அமர வேண்டுமென்று உத்தரவு போட்டது.

அதேபோல் கழக ஆட்சியில்தான் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு வருபவர்களை, அமர வைத்துப் பேச வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

என் இயல்பே எந்த சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சென்றாலும் அமர்ந்து பேசுவதுதான்.

யாரேனும் நின்றுகொண்டு பேசினால், "அய்யா, கேமராவில் ஏ/ஜி அலுவலகத்திலிருந்து பார்ப்பார்கள் அமர்ந்து பேசுங்கள்" என்று சில சார்பதிவாளர்கள் என் காதுபடவே கூறியிருக்கிறார்கள். ஆக, இந்த நடைமுறை கடந்த ஆட்சியிலே நடைமுறைக்கு வந்துவிட்டது" என்று பதிவிட்டுள்ளார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்



ராசி அழகப்பன்



### கழகத்தை விட்டுக் கொடுக்காதவர்கள்!

1979-ஆம் ஆண்டு, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில், அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான 'கவிதைப் போட்டி' நடந்தது. அப்போது, சென்னை மாநிலக் கல்லூரியில், இளங்கலை படித்துக்கொண்டிருந்த நான், போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசுக்குத் தேர்வானேன். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் பரிசினை வழங்கினார். "எந்தக் கல்லூரி" என்று கலைஞர் கேட்க, "மாநிலக் கல்லூரி" என்றேன். "அதானே பார்த்தேன், பேராசிரியர் மெ.சுந்தரம், பேராசிரியர் மு.மேத்தா மாணவனா நீ?" என்றவர், "எமர்ஜென்சி காலகட்டத்திலும் தமிழையும், அதன்பால் முனைப்பு கொண்ட தி.மு.க.வையும் விட்டுக்கொடுக்காதவர்கள் அவர்கள்" என்றார். தலைவரின் கையால் பெற்ற முதல் பரிசு, பல நினைவுகளைத் தேக்கியது.

**– எழுத்தாளர் ராசி அழகப்பன்,**
**திரைப்பட இயக்குநர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தலைவனும் அணிவகுப்பும்!

1962-ஆம் ஆண்டு தேர்தலில், கழகத்தின் வெற்றியைப் பறைசாற்றும் வகையில், சென்னை கடற்கரையில் வெற்றிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, காஞ்சிபுரத்தில் தான் வீழ்த்தப்பட்டதைக் குறிப்பிட்டு, "நான் தோற்றதால் தோல்வி என்னை அழுத்திவிடும் என எவரும் கருத வேண்டாம். நான் வெளியே நிற்கிறேன். என் அணிவகுப்பு உள்ளே செல்கிறது. தலைவன் இல்லாமல் அணிவகுப்பு அமைக்கமுடியும். அணிவகுப்பு இல்லாமல் தலைவனை அமைக்க முடியாது" என்று வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழ்த்தினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900